இருக்கிறார்கள்; அவை கிராமப்புற மாணவர்கள் வந்து படிக்கின்ற பள்ளிகள்—எனவே அந்தப் பள்ளிகள் அனைத்திற்கும் விரைவாக கட்டிடங்கள் கட்டித் தர அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுப்பாரா ? அடுத்த நிதி ஆண்டிலாவது அந்தக் கட்டிடத்தை கட்டித் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு துறைகள் என்றாலும்கூட, இரண்டும் வெவ்வேறு துறைகள். ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிலத்தை மாற்றம் செய்யும்போது இருக்கிற இடர்ப்பாடுகளைக் கருத்திலே கொண்டு தான் அதற்கான முடிவு எடுக்க முடியும். அந்த இடத்தை கல்வித் துறை பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. இட மாற்றம் செய்யப்பட்ட பின்பு கட்டிடம் கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 275, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை.

வினா எண் 276, திருமதி டி. சக்குபாய் தேவராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

276—

திருவள்ளூரில் அரசு மகளிர் தொழிற்பயிற்சி துவங்குதல்

***33701—**திருமதி டி. சக்குபாய் தேவராஜ் :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் நகரத்தில் அரசு மகளிர் தொழிற்பயிற்சி (ஐ.டி.ஐ.) துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழ. இடமில்லை.

திருமதி டி. சக்குபாய் தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெண்களுக்கென காவல் நிலையம் அமைத்தார். அதேபோல பெண்கள் சிசுவதையைத் தடுக்க அரசுத் தொட்டில் குழந்தைகள் திட்டம் அமைத்தார். இவ்வாறு எல்லா பெண்கள் முன்னேற்றத்திற்கும் பாடுபட்ட மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காக பெண்கள் வாழ்வு மலர திருவள்ளுவர் மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தருவார் என்று பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு மீண்டும் ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் 13-7-1992 ஆம் ஆண்டு அம்பத்தூரில் மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. அம்பத்தூருக்கும் திருவள்ளூருக்கும் இடையில் உள்ள தூரம் குறைவாக உள்ளது. ஆகவே மகளிர் அத்தனை பேர்களும் அம்பத்தூரில் படிக்கின்ற வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டத்தில் தனியார் தொழில் பயிற்சி நிலையங்கள் 21 இருக்கின்றன. ஆகவே புதிதாக மகளிர் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி டி. சக்குபாய் தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டாவது ஆவன செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு புதிய மகளிர் பயிற்சி நிலையம் ஆரம்பிப்பதற்கு அரசின் நிதி நிலை நெருக்கடி காரணமாகவும், படித்தவர் அதிகமாக இருப்பதாலும், பல்வேறு காரணங்களை முன்னிட்டும் இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.